# மட்டக்களப்பில் 'கறுப்புப் பொங்கல் தினம்' பொது அமைப்புகளால் இன்று முன்னெடுப்பு

## தமிழரசு எம்.பி.க்களும் பங்கேற்றனர்



மாட்டுப் பொங்கல் தினமான இன்று மட்டக்களப்பில் பொது அமைப்புகளும் பண்ணையாளர்களும் இணைந்து 'கறுப்புப் பொங்கல் தினம்' அனுட்டிக்கப்பட்டுள்ளது.

மயிலத்தமடு, மாதவனை பகுதிகளில் கால்நடை பண்ணையாளர்கள் முன்னெடுத்துவரும் போராட்டமானது 120 நாட்களைக் கடந்துள்ளநிலையில் குறித்த விடயம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள், விவசாய அமைப்புக்கள், பொதுமக்கள், மதத் தலைவர்கள் மற்றும் சமூக அமைப்புக்களைச் சேர்ந்தவர்களால் முன்னெடுக்கப்பட்ட கறுப்புப் பொங்கல் தினத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வானது ஓர் அமைதி வழிப் போராட்டமாகவும் மற்றும் நடை பவனியாகவும் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மயிலத்தமடு, மாதவனைப் பகுதிகளில் ஆக்கிரமிப்பாளர்களினால் தமது கால்நடைகள் வதைக்கப்படுவது தொடர்பில் பரஸ்தாபிக்கப்பட்டதோடு, அதற்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டது.


மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 02 செவ்வாய்க்கிழமை 16.01.2024 கதிர் 159



JITF 2024

14th JAFFNA INTERNATIONAL TRADE FAIR

14ஆவது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

முற்றவெளி மைதானத்தில்

JANUARY 19 | 20 | 21


## மருந்துகளுக்கு கூடிய கட்டணம் அறவிட்ட தனியார் மருத்துவமனைக்கு எதிராக வழக்கு

### 187 ரூபா சேலைன் போத்தல் 1685 ரூபாவாம்

பொரளை, நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் உள்ள தனியார் மருத்துவமனையொன்று, அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு மருந்துகளுக்கான கட்டணங்களை அறவிட்டதாக குறிப்பிட்டு, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் குறித்த மருத்துவமனைக்கு எதிராக மாளிகாகந்த நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நுகேகொட, மத்துவத்த பிரதேசத்தில் வசிக்கும் நோய்வாய்ப்பட்ட பெண்ணொருவரின் மகனான சனத் அத்துகோரள என்பவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், தேசிய 2▶

## நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி ரத்துச்செய்யும்!

### ஹர்ச டி சில்வா எம்.பி. தெரிவிப்பு



நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை கொண்டுவரும் அரசாங்கத்தின் முயற்சிகளை கடுமையாக எதிர்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் தனது சமூகவலைத்தளப் பக்கத்தில் இட்ட பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்காலத்தில் அமையவுள்ள ஐக்கியமக்கள் சக்தி அரசாங்கம் 2▶

## சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு மருத்துவமனைக் கட்டமைப்பு பாதிப்பு




நாடளாவிய ரீதியில் வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு இன்று காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தம் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமானது. இந்த நடவடிக்கையால் மருத்துவமனைக் கட்டமைப்பு பாதித்துள்ளது.

வைத்தியர் க 2▶

## சிறிய மற்றும் நடுத்தர பயிர்ச் செய்கையாளருக்கு உரங்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை

தேயிலைப் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் பல வகையான உரங்களின் விலையை 2000 ரூபாவினால் குறைக்கத் தீர்மானித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ரி-750, ரி-709 மற்றும் ரி-200 ஆகிய உர வகைகளின் விலை குறைக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த உர வகைகளின் விலை தற்போதுள்ள விற்பனை விலையில் இருந்து 50 சதவீதம் குறைக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி, ரி-750, ரி-709, உர மூட்டைகள் 7735 ரூபாவாகவும், ரி-200 உர மூட்டைகள் 5500 ரூபாவாகவும் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களின் தலைவருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. 2▶

## விலை அதிகரிப்பு செய்வோரை தண்டிக்குமாறு கோவிலில் தேங்காய் உடைத்து வேண்டுதல்



தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத்

பால் பக்கெற்கள் மற்றும் யோகட் விலை அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக முன்னேஸ்வரம் கோயில்களுக்கு சென்று அநியாயத்தை செய்வோரை தண்டிக்குமாறு தேங்காய் உடைத்து கடவுளிடம் வேண்டுதல் செய்வோம்!, என தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு ஒரு கிளாஸ் பால் அருந்தும் வாய்ப்பை இல்லாது செய்த போது, அவர்கள் அதற்கு பதிலாக யோகட் உட்கொண்டு ஒரு பக்கெற் பால் 2▶

## அரச சேவையில் வீண் செலவுகளை கட்டுப்படுத்த சுற்றறிக்கை வெளியீடு

அரச சேவையில் கடைப்பிடிக்க வேண்டிய செலவினக் கட்டுப்பாடுகள் குறித்து நிதி அமைச்சு சுற்றறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கையின்படி, மேலதிக வேலைநேர கொடுப்பனவுகள், விடுமுறை ஊதியம், பிற கொடுப்பனவுகள் மற்றும் பயணச் செலவுகள் ஆகியவை ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டிற்குள் மட்டுமே செலவிடப்பட வேண்டும் எனவும் கூடுதல் செலவுகள் எதுவும் செய்தல் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், மாதாந்த முற்கொடுப்பனவுகள் அடிப்படை சம்பளத்தை விட அதிகமாக இருக்கக்கூடாது எனவும், தற்போதைய ரெயில் உட்பட போக்குவரத்து பருவகால 2▶

# மரக்கறிகளின் விலை பெருமளவில் உயர்வு!

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் இன்று மொத்த மரக்கறிகளின் விலைகள் மிக உயர்ந்த நிலையில் காணப்பட்டன.

அதன்படி இன்று 1 கிலோ கரட்டின் விலை 1750 முதல் 2000 ரூபாய் வரையில் உயர்ந்துள்ளது.

1 கிலோ பீட்ரூட் 650- 700 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையிலும், 1 கிலோ முட்டைக்கோஸ் 500-680 ரூபாய்க்கும், போஞ்சின் விலை 850-500 க்கும் விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கறி மிளகாய் 850 முதல் 1000 ரூபாய் வரையிலும், கத்தரிக்காய் 450 முதல் 500 ரூபாய் வரையிலும் விற்பனையாகியுள்ளன.

1 கிலோ பயிற்றங்காய் 350 முதல் 400 வரையிலும், வெண்டிக்காய் 450 முதல் 500 வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது.

# கல்முனை பிராந்தியத்தில் தொற்றுநோய் பரவும் ஆபத்து

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையடுத்து தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் தோன்றியுள்ளதால் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

தொடச்சியாக பெய்த மழையினாலும், டீ.எஸ். சேனநாயக சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் கரையோரப் பிரதேசங்களில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உறவினர் வீடுகளிலும் இடைத்தங்கல் முகாம்களிலும் தங்கியுள்ளனர்.

தற்போது மழை வீழ்ச்சி குறைந்துள்ள நிலையில் தேங்கியுள்ள வெள்ளநீர் சுகாதாரமற்றுக் காணப்படுவதால் இந்நீரில் நடமாடுவதனையும், சிறு பிள்ளைகள் நீராடுவதனையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் பெற்றோர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வயிற்றோட்டம், தோல் நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும், கொதித்தாறிய நீரை பருகுமாறும் அறிவுறுத்தியுள்ளதுடன், தொடர்ச்சியான காய்ச்சல் இருந்தால் வைத்தியர்களை நாடுமாறும் வைத்திய கலாநிதி சக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

## விலை அதிகரிப்பு .....

குடித்துவிட்டு ஆறுதலடைந்தனர்.

இப்போது அரசு யோகட் மற்றும் பால் பக்கெற்றுகளின் விலையை 'வற்' வரி மூலம் உயர்த்தியதால் அந்த வாய்ப்பினையும் இல்லது செய்து விட்டது. மக்களை சுரண்டி வாழ்பவர்கள் இயற்கையால் தண்டிக்கப்படுவார்கள், எனவும் அவர் குறிப்பிடுள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், இன்றைய சூழ்நிலையில் யோகட் மற்றும் பால் பக்கெற்களின் விலையை அதிகரிப்பது நியாயமற்றது. பக்கற் பாலின் அதிகரிப்பால் மக்கள் இன்று காலையில் ஒரு கிளாஸ் பால் குடிக்க வழியில்லாமல் உள்ளனர்.

பக்கெற் பால் வாங்க பணம் இல்லாததால், குறைந்த தொகை கொடுத்து யோகட் மற்றும் பால் பக்கெற் குடித்து வந்தனர். இன்று அதுவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. எருமைப்பால் விலையையும் அரசு உயர்த்தியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், மக்கள் விஷம்தான் அருந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது, என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ரெத-42)

# பெண் மருத்துவர்கள் உடை மாற்றும் அறையில் கமரா பொருத்தியவர் கைது

கண்டி தேசிய வைத்தி யசாலையின் தொண்டை, காது, மூக்கு சத்திர சிகிச்சை அறைக்கு அடுத்துள்ள பெண் மருத்துவர்கள் உடை மாற்றும் அறையில் கைத்தொலைபேசி மூலம் இரகசியமாக காட்சிகளை ஒளிப்பதிவு செய்த வைத்தியசாலையின் சிற்றூழியர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

சத்திர சிகிச்சை மேற்கொள் வதற்கு முன்னர் மேற்படி அடுத் துள்ள அறையில் அதற்கான உடையை மாற்றிக் கொண்டிருந்த பெண் மருத்துவர் ஒருவர் தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தையடுத்து அங்கு சந்தேகத்திற்கிடமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்தொலைபேசி ஒன்றை கண்டெடுத்துள்ளார்.

குறித்த கைபேசியை சோதித்து பார்த்த போது, அதில் உடை மாற்றும் காட்சிகள் இருப்பதை கண்டு, உடனடியாக மருத்துவமனை நிர்வாகத்திடம் புகார் அளித்துள்ளார். மருத்துவமனை நிர்வாகத்தினர் சி.சி.டிவீ காட்சிகளை ஆராய்ந்து பார்த்த போது மருத்துவமனையைச்சேர்ந்த சிற்றூழியர் ஒருவர் குறித்த அறையினுள் பிரவேசித்து வீடியோ பதிவுகளுக்காக கைத்தொலைபேசியொன்றை மறைவாக வைக்கும் காட்சியை காண முடிந்தது. இதனையடுத்து, சம்பவத்துடன் தொடர்புடைய 40 வயதுடைய சிற்றூ ழியரை பொலி ஸார் கைது செய்தனர். (ரெத-43)

# நாடாளுமன்ற அமர்வுகள் 24 ஆம் திகதியுடன் நிறைவு

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது சபை அமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்

அதற்கமைய ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது சபை அமர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்படி நாடாளுமன்றத்தின் அமர்வை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பான வர்த்தமானியை எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி வெளியிடுவார் என சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

## அரச சேவையில் வீண்...

டிக்கெட்டுகள் தொடர்பில் சுற்றறிக்கைகள் மூலம் அனுமதிக்கப்பட்ட வசதிகளைத் தவிர, வேறு சாதாரண பணிகளுக்கென பிற போக்குவரத்து வசதிகளுக்கு அரசு நிதியைப் பயன்படுத்த முடியாது என்பதுடன் அதிகாரிகளுக்கு ஒரு வாகனம் மட்டுமே வழங்க வேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவுகளைப் பெறும் அதிகாரிகள் ஏனைய வாகனங்களை பயன்படுத்தக் கூடாது. வெளிநாட்டு பயிலரங்குகள், கலந்துரையாடல்கள் மற்றும் பயணங்கள் போன்றவற்றில் பங்கேற்பது தொடர்பில் வெளிநாட்டு நிறுவனங்கள் அதற்கான முழுச் செலவையும் ஏற்றுக்கொண்டால் மட்டுமே அப்பயணங்களை மேற்கொள்ள முடியும்.

வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி கட்டப்படும் கட்டிடங்களைத் தவிர புதிய கட்டிடக் கட்டுமானங்களை தொடங்கக்கூடாது. தேசிய விழாக்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியைத் தவிர, திருவிழாக்கள், நட்புறவு சந்திப்புகள், கண்காட்சிகள், மாநாடுகள், திறப்பு விழாக்கள், மாநாடுகள் போன்றவற்றுக்கு அரசு நிதியைப் பயன்படுத்த முடியாது, எனவும் அந்த சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெத-41)

## மருந்துகளுக்கு கூடிய....

மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி 7 முதல் பெப்ரவரி 19 ஆம் திகதி வரை, இந்த நோயாளி குறித்த தனியார் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்துள்ளார். அங்கு அவருக்கு போடப்பட்ட ஊசி உட்பட பதினொரு வகை மருந்துகளும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விலையை விட அதிக விலையில் வழங்கப்பட்டிருப்பது ஆரம்ப கட்ட விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

187 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்ட ஒரு சேலைன் போத்தல் 1685.20 ரூபாவிற்கும், 12,264 ரூபாவுக்கு வழங்க வேண்டிய லயோர்டம் 1 எனும் தடுப்பூசி 33,447.30 ரூபாவுக்கும், 6696.50 ரூபாவுக்கு வழங்க வேண்டிய மெரோன்ஸ் 1 ஜி எனும் தடுப்பூசி 17,730 ரூபாவுக்கும் வழங்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக பதினொரு வகையான மருந்துகளுக்கு இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடிய கட்டணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதற்கமையவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெத-40)

## நிகழ்நிலை பாதுகாப்புச் ......

உடனடியாக நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை இரத்துச் செய்யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் குறித்து அர்ப்பணிப்புடன் உள்ள நாங்கள், சிறுவர் பாலியல் மற்றும் ஏனைய பாரிய இணையக் குற்றங்களைத் தடுப்பதற்காக பாரிய திட்டங்களுடன் இணைந்து செயற்படுவோம், எனவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## சுகாதார ஊழியர்கள்.....

ளின் கொடுப்பனவுகள் 35,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான மாவட்ட பொது வைத்தியசாலைகளின் அவசர சேவைகளைத் தவிர ஏனைய அனைத்து சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதன் காரணமாக தூர இடங்களில் இருந்து வருகை தந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

## சிறிய மற்றும் நடுத்தர......

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தேயிலை பயிர்ச்செய்கைக்கு இந்த உர மானியம் வழங்கப்படுவதுடன், பாரிய தேயிலைச் செய்கை நிறுவனங்களுக்கு மேற்படி வகை உரங்களை 9935 ரூபாவிற்கு வழங்கவும் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# வடக்கு மாகாண புதிர் எடுத்தலும் தைப்பொங்கல் விழாவும் இன்று





வடக்கு மாகாண புதிர் எடுத்தலும் தைப்பொங்கல் விழாவும் இணைந்த நிகழ்வு இன்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வு இன்று காலை 9.30 மணியளவில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல்லவராயன்கட்டு மாதிரி கிராமத்தில் சிறிநாகபூசணி அம்பாள் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எச். எம்.சார்ள்ஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

பாரம்பரிய முறையில் பல்லவராயன் கட்டு சந்தியில் புதிர் எடுக்கப்பட்டு விழா மண்டபம் வரை எடுத்து வரப்பட் டது. தொடர்ந்து விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

அதனையடுத்து எடுத்து வரப்பட்ட புதிர் பாரம்பரிய முறைப்படி அரிசியாக்கப்பட்டு பொங்கலிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமானதுடன், கலை நிகழ்வுகளும் அரங்கில் இடம்பெற்றன. (02)

# தென்கிழக்கு பல்கலையை வழமைக்கு கொண்டுவர உபவேந்தரும் ஊழியர்களும் களத்தில் இறங்கினர்

(நூருல் ஹுதா உமர்)



சீரற்ற காலநிலை, மழை, வெள்ளம் மற்றும் வான்கதவுகள் திறப்பு காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் சில பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ள அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளை மிகுந்த சிரமத்துடன் சுத்தப்படுத்தும் ஊழியர்களுடன் உபவேந்தர் உள்ளிட்ட குழுவினரும் இணைந்து சுத்திகரிக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

சீரற்ற காலநிலை மற்றும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் வெள்ளநீர் புகுந்ததன் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ள அதேவேளை பல்கலைக்கழகத்துக்குள் அவசர நிலையை பிரகடனப்படுத்தி சகல தரப்பு ஊழியர்களின் ஒத்துழைப்புடன் வளாகத்தில் முழுமையாக சுத்திகரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கருடன் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், அரபு மற்றும் இஸ்லாமிய பீடத்தின் பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா எம்.ஜி.எச்.,பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா, வேலைப்பகுதி பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸில், மற்றும் பேராசிரியர்கள் கல்விசாரா ஊழியர் சங்க தலைவர் எம்.ரீ.எம். தாஜ/தீன். செயலாளர் எம்.எம்.முஹம்மட் காமில் உள்ளிட்ட பலரும் இணைந்திருந்தனர்.

தற்போது பல்கலைக்கழகத்துக்குள் இருந்த வெள்ளம் வடிந்துள்ள நிலையில் தாழ்வான சில இடங்களில் தற்போதும் நீர் தங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் காரணமாக பல்கலைக்கழகத்தின் சில பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தங்களுக்கு ஏற்கனவே அனர்த்த முகாமைத்துவ பிரிவினரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் காரணமாக பாரிய சொத்து இழப்புக்களை ஊழியர்களின் மேலான ஒத்துழைப்புடன் குறைக்க கூடியதாக இருந்ததாக உபவேந்தர் குறிப்பிட்டார்.

மேலும், தங்களது சக்திக்கு மேலதிகமாக ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் விபரங்கள் சேகரிக்கப்பட்டு



வருவதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டால் கையாளவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் கருத்து வெளியிட்டார். அத்துடன், சேதங்கள், மீள் கட்டுமானம் மற்றும் எதிர்கால அனர்த்த தவிர்ப்பு திட்டவரைபுகள் தொடர்பிலும் விரைவில் சம்மந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் சுத்திகரிப்பு பணிகளில் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக ஊழியர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.



# மொசாட் அலுவலகம் மீது ஈரான் தாக்குதல்! ஈராக், சிரியா பிராந்தியத்தில் கடும் பதற்றம்

ஈராக்கில் உள்ள இஸ்ரேலின் புகழ்பெற்ற உளவு அமைப்பான மொசாட் உளவு அமைப்பின் தலைமை அலுவலகத்தை குறிவைத்து ஈரான் தாக்குதலை நடத்தியுள்ளது சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது. காரணம், இந்த உளவு அலுவலகம் குர்திஸ்தானின் அர்பில் பகுதியில் அமெரிக்க தூதரகக் கட்டிடத்தின் அருகே உள்ளது.

இஸ்ரேல் நாட்டின் மொசாட் உளவு அமைப்பு ஈரானுக்கு எதிராக உளவுத் தகவல்களை சேகரிப்பதாக நீண்ட நாள் குற்றச்சாட்டு இருக்கிறது. இந்நிலையில் மொசாட் உளவுத்துறை அலுவலகம் மீது ஈரான் நடத்தியுள்ள தாக்குதல் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது.

ஈரான் நடத்திய திடீர்த் தாக்குதலில் ஈராக், சிரியா நாடுகள் அதிர்ச்சியடைந்துள்ளன.

இந்தத் தாக்குதல் குறித்து குர்தீஷ் பிராந்திய அரசு வெளியிட்ட அதிகாரபூர்வ அறிக்கையில், ஈரான் தாக்குதலில் அப்பாவி பொதுமக்களில் 4 பேர் இறந்ததாகத் தெரிவித்துள்ளது. இவர்களில் பெஷ்ராய் தியாஷி என்ற உள்ளூர் தொழிலதிபரும் உயிரிழந்தார் என்று குறிப்பிட்டுள்ளது. இவர் ரியல் எஸ்டேட், பாதுகாப்பு ஏஜென்சி நிறுவனத் தொழில்களை வெற்றிகரமாக செய்து வந்தார். தியாஷியின் அரண்மனை மீதே ஈரான் குண்டு விழுந்துள்ளது.

இதற்கிடையில், இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து ஈரானின் பாதுகாப்புப் படையான புரட்சிகர காவல் அமைப்புகள் வெளியிட்ட அதிகாரபூர்வ அறிவிப்பில், "சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள ஐ.எஸ். பயங்கரவாத குழுக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினோம். ஈரானுக்கு எதிராக உளவு வேலைகளை செய்து வந்த இஸ்ரேலுக்குச் சொந்தமான மொசாட் உளவு அமைப்பின் தலைமையகத்தை தாக்கி அழித்தோம்", என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



முன்னதாக இம்மாத தொடக்கத்தில் ஈரானில் நடந்த காசிம் சுலைமாணி நினைவேந்தல் நிகழ்வில் நடந்த குண்டு வெடிப்பில் 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாகக் கருதப்படுகிறது. (04)

# 9,000க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் ஒழிப்பு காஸா யுத்தம் பற்றி இஸ்ரேல் தெரிவிப்பு



கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தெற்கு இஸ்ரேலுக்குள் அதிரடியாக நுழைந்த ஹமாஸ் குழுவினர் பொது மக்களைத் தாக்கி 1,200 பேரைக் கொன்று, 240 பணயக்கைதிகளை கடத்திச் சென்றதாகத் தெரிவித்து இஸ்ரேல் போரை அறிவித்தது.

ஹமாஸ/க்கு எதிரான தரைவழித் தாக்குதலின்போது காஸா பகுதியில் 9,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனிய தீவிரவாதிகளை இஸ்ரேல் தற்காப்புப் படைகள் ஒழித்து விட்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

ஹமாஸின் ஐந்து படைப்பிரிவு நிலை தளபதிகளில் இருவரை ஐடிஎப் அகற்றியுள்ளதாகவும் இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது. கூடுதலாக, 19 படைப்பிரிவு தளபதிகள், 50 நிறுவன தளபதிகள் கொல்லப்பட்டனர். கடந்த மூன்று மாதங்களில், இஸ்ரேல் ராணுவம் கடலோரப் பகுதியில் சுமார் 30,000 இலக்குகளைத் தாக்கியது.

காஸாவில் உள்ள பாலஸ்தீனிய பயங்கரவாத குழுக்கள் சுமார் 9,000 ரொக்கெட்டுகளை ஏவியுள்ளன. அவை யூத அரசின் எல்லையை அடைந்தன என்று ஐடிஎப் தரவுகள் தெரிவிக்கின்றன. மேலும் நூற்றுக்கணக்கான ரொக்கெட்டுகள் காஸா ஸ்ட்ரிப் பகுதிக்குள் விழுந்தன.

நாட்டின் வடக்கு எல்லைகளில், போர் தொடங்கியதில் இருந்து சிரியா மற்றும் லெபனானில் சுமார் 750 இலக்குகளை ஐடிஎப், இஸ்ரேலிய விமானப்படை தாக்கியுள்ளது. சுமார் 2,000 ரொக்கெட்டுகள் மற்றும் ஏவுகணைகள் சிரியாவிலிருந்து ஏவப்பட்ட சுமார் 30 ஏவுகணைகளைத் தவிர, லெபனானில் இருந்து இஸ்ரேலிய எல்லைக்குள் நுழைந்தன.

ஒக்டோபர் 7 முதல் 522 வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், ஒக்டோபர் 27ஆம் திகதி காஸாவில் தரைப் படை நடவடிக்கை தொடங்கியதில் இருந்து 188 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். ஹமாஸ் தனது திடீர் தாக்குதல்களைத் தொடங்கியதில் இருந்து 779 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 76 வெளிநாட்டவர்கள் உள்பட 50,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

ஒக்டோபர் 7 படுகொலைக்கு ஞாயிற்றுக்கிழமையன்று 100 நாள்களைக் குறிக்கும் நிலையில், ஹமாஸ் நாள் முழுவதும் ரொக்கெட்டுகளை ஏவின. அஷ் டோத், யாவ்னே, கிப்புட்ஸ் சாட், மோஷவ் பென் ஜகாய், மோஷவ் ஜிம்ராத் மற்றும் மோஷவ் வா ஆகிய இடங்களில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டன. இதில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (04)

# போரை நிறுத்தப்போவதில்லை! இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டம்



இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் 23,000த்திற்கும் அதிகமான காஸா மக்களைக் கொன்று குவித்ததாகத் தெரிவித்து இஸ்ரேலின் மீது தென்னாபிரிக்கா இனப்படுகொலைக் குற்றச்சாட்டை முன்வைத்தது. சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு இரண்டு நாள்களுக்கு விசாரணை மேற் கொள்ளப்பட்டது.

பொதுவாக, சர்வதேச நீதிமன்றத்திற்கு வரும் வழக்குகளுக்கு உடனடி தீர்ப்பு என்பது இருக்காது. பல ஆண்டுகள் விசாரணை நடைபெறும். எனினும் இந்த வழக்கு, காஸாவில் போரை நிறுத்துவதற்கான ஆணைகளைப் பிறப்பிக்குமா?, என்ற எண்ணம் உலகளாவிக் காணப்பட்டது.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை தொலைக்காட்சி ஒன்றில் பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'போரை யாராலும் நிறுத்த முடியாது. சர்வதேச நீதிமன்றத்தால் கூட நிறுத்தமுடியாது' எனத் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் குறித்து எந்த ஆணைகளையும் சர்வதேச நீதிமன்றம் பிறப்பிக்காத நிலையில், நீதிமன்றத்தின் உத்தரவை இஸ்ரேல் மதிக்கப்போவதில்லை என வெளிப்படையாக தெரிவித்துள்ளார் நெதன்யாகு.

கடந்த 2020 இல் உக்ரைன் மீதான தாக்குதல்களை ரஷ்யா நிறுத்திக்கொள்ள வேண்டும் என சர்வதேச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் இன்றளவும் போர் நிறுத்தப்படாதமை குறிப்பிடத்தக்கது. (04)



# மருதமுனை ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை ஜனாஸா நலன்புரி அமைப்பு மிக நீண்டகாலமாக முஸ்லிம் ஜனாஸாக்கள் இடம்பெறுகின்ற போது ஜனாஸாக்களை உரிய நேரத்துக்கு உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான வாகன வசதி, அதேபோன்று ஒரு ஜனாஸாவின் இறுதி கடமையான நல்லடக்கம் செய்யும் வரையிலான பல்வேறு சேவைகளை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.

இவர்களது இந்த சேவைகளை வினைத்திறனாகவும் சிறப்பாகவும் மேற்கொள்ளும் நோக்கில் தற்போது புதிய அலுவலகம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜ/ம்ஆ பள்ளிவாசலின் மேல் தளத்தில் இந்த புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மஸ்ஜிதுல் கபீர் ஜ/ம்ஆ பள்ளிவாசல் முன்னாள் தலைவரும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் கலாநிதி ஐ.எல்.எம். மாஹிர், மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா சபை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷெய்க். எப்.எம். அஹமது அன்ஸார் (நழீமி), மருதமுனை ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் அஷெய்க். எஸ்.எம். றியாஸ் (நழீமி), பொருளாளர் எம்.ஐ.எம். பைசல், செயலாளர் அஷெய்க். கே.எம்.றிழா (நழீமி), மஸ்ஜிதுல் கபீர் ஜ/ம்ஆ பள்ளிவாசல் முன்னாள் செயலாளர். அப்பாஸ் எம்.நியாஸ், மருதமுனி மக்பூலியா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் எம்.ஜெமீல் உட்பட உலமாக்கள், சமூக சேவையாளர்கள், மையவாடி பராமரிப்பாளர்கள், சமூக நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பாலமுனை ஹிக்மா வித்தியாலயத்தில் அதிபர் தலைமையில் சிரமதானம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

விடுமுறையின் பின் பாடசாலை ஆரம்பிக்கப்படுவதை முன்னிட்டு பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்பாயிஸ் தலைமையில், பிரதி அதிபர் ஐ.எம். பாஹிம், பொது சுகாதார பரிசோதகர் எம். மிஹியார், பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்புடன் சிரமதான அடிப்படையில் பாடசாலை வகுப்பறைகள், சுற்றாடல் என்பன சுத்தம் செய்யப்பட்டன.

இப்பாடசாலையானது சில தினங்களுக்கு முன்னர் நிகழ்ந்த வெள்ள அனர்த்தத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்டு பாடசாலையினுடைய வகுப்பறை கட்டிடங்கள் அனைத்திலும் வெள்ள நீர் புகுந்து மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலும், வெள்ளத்தில் மூழ்கிய வகுப்பறை கட்டடங்களின் நீர் இன்னும் வற்றாத நிலையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியா அல் ஹிஜ்ரா முன்பள்ளி பாடசாலையில் மூன்று நிகழ்வுகள்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

வவுனியா அல் ஹிஜ்ரா பாலர் பாடசாலை மற்றும் அல்-பலாஹ் விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த முன்பள்ளி சிறார்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் முதியோர் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவ மாணவிகளுக்கான ஞாபகச் சின்னங்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் வவுனியா அல் ஹிஜ்ரா முன்பள்ளி பாடசாலையில் சிறப்பாக இடம் பெற்றன.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான் கலந்து சிறப்பித்தார்.




## பொரலுகந்த ரஜமஹா விகாரையில் திருமலை தைப்பொங்கல் நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் திருகோணமலை பொரலுகந்த ரஜமஹா விகாரையில் தைப்பொங்கல் நிகழ்வு நேற்று இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை நிலாவெளி வீதியிலுள்ள பெரிய குளத்தில் அமைக்கப்பட்டுள்ள பொரலுகந்த ரஜமஹா விகாரையின் விகாரா திபதி சுகிதவங்ச திஸ்ஸ தேரர் இன ஒற்றுமையை வலுவூட்டும் விதத்தில் விகாரைக்கு அருகில் உள்ள வீடுகளுக்கும் சென்று பொங்கல் நிகழ்வகளிலும் கலந்து கொண்டுள்ளார்.

கடந்த காலங்களில் குறித்த விகாரையை நிர்மாணிக்கும் காலகட்டத்தில் பல எதிர்ப்புகள் இருந்த போதிலும் குறித்த இடத்திலேயே விகாரை நிர்மாணிக்கப்பட்டு தற்போது பிரித் நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

அனைவருடனும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எல்லா மதங்களும் ஒன்றுமையையே போதிக்கின்றன. அதேபோன்று நாமும் ஐக்கியத்துடன் மற்றவர்களை மதித்து வாழ வேண்டும் என்ற நோக்குடன் பொங்கல் நிகழ்வுகளிலும் பங்கு கொண்டதாக குறித்த விகாரையின் விகாராதிபதி தெரிவித்தார்.

# நியூசிலாந்து அணித்தலைவர் கேன் வில்லியம்சன் காயத்தினால் பாகிஸ்தான் தொடரிலிருந்து விலகல்?

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் பாகிஸ்தான் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள அடுத்த மூன்று ரி-20 போட்டிகளிலும் விளையாடமாட்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் அணியானது நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடி வருகின்றது.

குறித்த இந்தத் தொடரில் முதல் இரண்டு போட்டிகளிலும் கேன் வில்லியம்சன் விளையாடியிருந்தார். இதில் இரண்டாவது போட்டியில் 15 பந்துகளில் 26 ஓட்டங்களை அடித்திருந்த வில்லியம்சன் தொடையில் ஏற்பட்ட தசைப்பிடிப்பு உபாதையால் களத்திலிருந்து வெளியேறினார்.

கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஐபிஎல் தொடரில் தசைப்பிடிப்பு ஏற்பட்டிருந்த அதே வலது தொடைப்பகுதியில் கேன் வில்லியம்சனுக்கு மீண்டும் உபாதை ஏற்பட்டுள்ளது.

இந்த உபாதைக்கான சிகிச்சைகளை மேற்கொண்டு வரும் இவர், மூன்றாவது போட்டியில் விளையாடமாட்டார் என உறுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் அடுத்த இரண்டு போட்டிகளிலும் இவர் விளையாடுவதும் சந்தேகத்துக்கிடமாகியுள்ளது.

கேன் வில்லியம்சனுக்கு பதிலாக வில் யங் அணியில் இணைக்கப்பட்டுள்ள போதும், டிம் செபர்ட் மூன்றாவது



போட்டியில் களமிறங்குவார் என நியூசிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் கரி ஸ்டீட் தெரிவித்துள்ளார்.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதல் 2 போட்டிகளிலும் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது. மூன்றாவது போட்டி நாளை புதன்கிழமை (17) நடைபெறவுள்ளது. (04)

# அமெரிக்க அதிபர் தேர்தலிலிருந்து விலகுகிறேன்! குடியரசுக் கட்சியின் விவேக் ராமசாமி அறிவிப்பு



அமெரிக்க அதிபர் தேர்தல் இந்தாண்டு நடைபெறவுள்ளது. ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய அதிபர் ஜோ பைடன் மீண்டும் போட்டியிடுகிறார்.

பிரதான எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியின் சார்பில் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடவுள்ளதால், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இளம் தொழிலதிபர் விவேக் ராமசாமி இப்போட்டியில் இருந்து விலகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐயோவா உள்கட்சி தேர்தலில் விவேக் ராமசாமி தோல்வியடைந்த நிலையில், இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபா் தோ்தலில் தான் வெற்றி பெற்றால், வெளிநாட்டுப் பணியாளா்களுக்கு ஹெச்1பி நுழைவு இசைவு (விசா) வழங்கும் நடைமுறைக்கு மாற்றாகப் புதிய முறை அமல்படுத்தப்படும் எனக் குடியரசுக் கட்சியின் போட்டியாளா் விவேக் ராமசாமி முன்னதாக தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது. (04)






## தம்பலகாமத்தில் நெல் அறுவடை விளைச்சல் குறித்து பெருங்கவலை



(ஹஸ்பர் ஏ.எச்)

தற்போது பெரும்போக நெற்செய்கை இடம்பெற்று வரும் நிலையில் தம்பலகாமம் பிரதேச செயலக பத்தினிபுரம் கிராமப் பகுதியில் இயந்திரம் மூலமான அறுவடை இடம் பெற்று வருகிறது.

இப்பகுதியின் நீர் நாவல் மொட்டை வயல் நிலப் பகுதிகளில் அதிகளவான அறுவடை இடம் பெற்றாலும் விளைச்சல் குறைவு என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான ஏக்கர் நிலங்களில் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அதிகளவான நோய்த் தாக்கம், பசளை, கிருமி நாசினி விலைகளின் அதிகரிப்பு, சீறற்ற கால நிலை காரணமாக விளைச்சளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக நஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஒரு நெல் மூடை 6000 ரூபா வரை விலை செல்கிறது. ஒரு ஏக்கருக்கு 10 தொடக்கம் 12 வரை மூடைகளே கிடைக்கப் பெறுவதுடன், வெட்டுக் கூலிக்கு ஏக்கருக்கு 15,000 ரூபா வரை கொடுக்கவேண்டியுள்ளது.

இப்படியான போக விலைச்சலில் எவ்வித இலாபமும் இல்லை எனவும் கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் வெள்ள நீர் வேளாண்மை செய்கையை பாதித்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே தங்களுக்கு நட்ட ஈட்டைப் பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளுக்கு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## அம்பாறை மாவட்ட வயல்கள் வெள்ளத்தால் பாரியசேதம்!



(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக அதிகப்படியான விளைந்த வயல் நிலங்கள் பாரிய சேதத்தை எதிர்கொண்டுள்ளன.

மாவட்டத்தில் கடந்த ஐந்து நாட்களாக கால நிலை சீராக இருக்கிறது. வெயில் எறித்துவருகிறது. மக்கள் வழமையான நிலைமைக்கு மாறி வருகிறார்கள்.

பெரும்பாலான வீதிகள் வெள்ளம் வடிந்து காணப்பட்டன. இருந்த போதிலும் தாழ் நில பிரதேசங்களில் இன்னமும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

பெரும்பாலான வயல் நிலங்களில் வெள்ளம் இன்னும் இருப்பதால் அவை கைவிடப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றன.

இதனால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். இம்முறை விளைச்சல் மிகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.01.2024 இல் வெளியிடப்பெற்றது.